# மஹியங்கன பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 11 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 பெப்ரவரி 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூன் 27 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மஹியங்கன பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 4,127,765 தொகையான செலவினம் கடன்கொடுத்தோராக ரூபா 2,956,448 எனக் காண்பிக்கப்பட்டமையினால் கடன்கொடுத்தோர் ரூபா 1,171,317 தொகை குறைவாகவும் திரண்ட நிதியம் அப்பெறுமானத்தினால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நிறைவேற்றப்படாத 06 வேலைகளின் பெறுமதியான ரூபா 2,997,728 தொகை கடன்பட்டோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டமையினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் மற்றும் திரண்ட நிதியம் என்பன அப்பெறுமானத்தினால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காணப்பிக்கப்பட்டிருந்தது.

## 2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 132(ஒ) மற்றும் (க) பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சரின் அங்கீகாரம் பெறப்படாது 08 சந்தர்ப்பங்களின் போது தொண்டர் நிறுவனங்களுக்கு பொருள் உதவிகளை வழங்குவதற்காக ரூபா 148,936 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(அ) சபையில் பதில் கடமையாற்றும் உத்தியோகத்தருக்கு 6 சந்தர்ப்பங்களின் போது பதில் கடமை மேலதிக ஊதியமாக ரூபா 34,470 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பிரதேச சபையின் திட்டமிடல் குழுவில் பங்கபற்றியமைக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊவா மாகாண அலுவலகத்தின் திட்டமிடல் உதவியாளருக்கு திட்டமிடல் குழு படிகளுக்கு மேலதிகமாக தாபன விதிக் கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பிரிவு மற்றும் 8.1 ஆம் பிரிவுக்கு முரணாக 2 சந்தர்ப்பங்களின் போது மைல் கட்டணம் மற்றும் இணைந்த படிகளாக ரூபா 12,440 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

திருத்தச் செலவினம் ரூபா 163,829 தொகையான கிராந்துருகோட்டே உப அலுவலகத்தை மீளமைத்தல் வேலை தொடர்பாக 2013 மார்ச் 21 ஆந் திகதிய பௌதிக பரிசோதனையின் போது பொருத்தப்பட்டிருந்த கதவுகளின் பூட்டுக்கள் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டமை, பின்பக்கத்தில் ஒரு கதவுநிலையின் சுவர் மற்றும் நிலைகளுக்கிடையில் 8 மில்லிமீற்றர் அளவிலான இடைவெளி காணப்பட்டமை, உரிய பிரகாரம் சுவருடன் பொருத்தப்படாமை இனாமல் நிறம் இருதடவை பூசுவதற்குப் பதிலாக ஒரு தடவை மாத்திரம் பூசப்பட்டமை போன்ற விடயங்கள் அவதானிக்கப்பட்டன.